**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>**
**<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>**

**<u>MCOP No. 17/2024</u>** 05-03-2026 **ம.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அப்துல்நாபி | தொழில் | ஆட்டோ டிரைவர் |
| த/பெ | சபியுல்லா | கிராமம் | பச்சப்பட்டி |
| வயது | 35 | தாலுகா | சேலம் |
| | | மாவட்டம் | சேலம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு</u>**

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விபரங்கள் முழுமையாக எனக்கு தெரியும். நான் கொடுத்த புகாரின் பேரில் தான் தாராபுரம் காவல் நிலையத்தில் விபத்து குறித்து வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் மேற்படி முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்து சமயத்தில் என்னுடைய மனைவி நிலோஃபர் நிஷா இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் அவருக்கு பின்னாலும் எனக்கு பின்னால் என்னுடைய மகன் அமர்ந்தும் பயணம் செய்தோம் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் என்னுடைய மனைவி நிலோபர் நிஷாவுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் இருந்தது விபத்தின் போது தவறி விழுந்து விட்டது மோட்டார் வாகன ஆய்வின் போது மேற்படி ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஓட்டுநர் உரிமத்தின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. விபத்து சமயத்தில் வேன் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி கிழக்கு பக்கமாக வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி தெற்கு பக்கமாக திரும்பும் போது மேற்படி வேன் வருவதை கவனித்து திரும்பி இருந்தால் விபத்தை தவிர்த்திருக்கலாம் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு மேற்படி இருசக்கர வாகனத்தை உரிய ஓட்டுனர்

உரிமம் இல்லாமல் என்னுடைய மனைவி ஓட்டியதும் மூன்று நபர்கள் மேற்படி இருசக்கர வாகனத்தில் பயணித்ததும் தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த மூன்று நபர்களுமே தலைக்கவசம் அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல அணிந்திருந்தோம். புகாரில் நாங்கள் மூவரும் தலைக்கவசம் அணிந்து இருந்ததாக குறிப்பாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து என்னுடைய மனைவியின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் மூன்றாம் எதிர்மனுதாரர் எங்களுக்கு இழப்பீடு தர வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.03.05 19:48:49 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.